உ

கடவுள் துணை

விவேக திவாகரன்

திருச்செங்கோட்டில் மாதந்தோறும் பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருவள்ளுவர்.

தொகுதி ௩] இராக்ஷஸ வருஷம் வைகாசி-ஆனிமீ [பகுதி ௨-௩

உள்ளுறை.

ஆகாய விமானம் பத்திராசிரியர் 33
புத்தி நெறி, ஸ்ரீமான். K. குப்புசாமி பிள்ளை ... 36
நேசமருக்கோர் இன்சொல். தினகரன் 39
பெண் கல்வியைப்பற்றி—Mr. E. W. Legh, I. C. S.
(சேலம் கலெக்டர்) மின்டாவி துரை பேச்சு.
பத்திராசிரியர் 42
பெரிய குடித்தனங்களிற் பல க்ஷீணமடையக்
காரணமென்ன? ஸ்ரீமான். கந்தசாமிப் பிள்ளை B. A. 45
சைவம். ஸ்ரீமான். சிவஞானம் 48
உண்மையுள்ள ஓர் வேலைக்காரன் செவரெண்டு விட்னி 51
நித்திரை "ஜனவிநோதினி" 55
குருமார்களும், சிஷியர்களும் ஸ்ரீமான். ஆறுமுகம் ... 62
மதவாசாரியார் பத்திராசிரியர் 65
கொங்கு பத்திராசிரியர் 9

பத்திராசிரியர்—தி. அ. முத்துசாமிக் கோனார்.

திருச்செங்கோடு விவேக திவாகரன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 3.] **1915.** [தனிப்பிரதி 6 அணா.

உ

கடவுள் துணை.

விவேக திவாகரன்.

தொகுதி ௧] இராக்ஷஸ வருஷம், வைகாசிமீ, ஆனிமீ. [பகுதி உ-௩.

1915.

ஆகாய விமானம்.

இப்பொழுது நடந்துவரும் ஐரோப்பிய மஹா யுத்தத்தில் பல அரிய யந்திர தந்திரங்கள் உபயோகப்பட்டு வருகின்றன. அவைகள் இதன்முன் எந்த யுத்தத்திலும் இருந்ததில்லையென்று சொல்லப்படுகிறது. இவற்றுள் ஆகாயவிமானம், ஆகாயரதம், ஆகாயக்கப்பல் என்பவைகள் விசேஷம். பெயரால் மூவகையாயினும் ஆகாயத்தில் பறக்கக்கூடியது எனலால் பறவை யந்திரம் என்னும் சொல்லிலடங்கும். இந்த யந்திரமானது ஆகாயவழிக் கிளம்பி குறித்த இடத்துக்குச் சென்றுவரும் தகுதியினையுடையது. பலபெயர்களை ஏற்றிக்கொண்டு போவது மாத்திரமல்ல, பீரங்கி முதலிய ஆயுதங்களுடன் சென்று யுத்தம் புரிதற்கும் ஏற்றதாக இருக்கிறது இவ்வளவு உன்னத நிலைமையில் கட்டி முடித்தவர் ஜர்மன் தேசத்திலுள்ள கவுண்ட் ஜெப்பலின் என்பவர் இவர் ஒரு ராணுவ அதிகாரத்திலிருந்தவர். இவர் இவ் விமானத்தைக் கட்டி முடித்தபொழுது வயது 73. இவருக்கு உதவியாக இவருடைய குமாரத்தியுமிருந்ததாகத் தெரிகிறது. இதனைக்கட்டி முடித்துக்காட்டிய ஜெப்பிலினை "இருபதாம் நூற்றாண்டிலுள்ள ஜர்மனியருக்குள் இவரே மிகப்பெரியவர்" என ஜர்மன் சக்கரவர்த்தி கெய்ஸர் புகழ்ந்தனர்.

இதுபோல நமது தேசத்தில் முற்காலத்தில் ஆகாயத்திற் சென்று வரக்கூடிய யந்திரங்கள் இருந்தனவா? நமது பூர்வீக சரித்திரமாகிய புராண காவியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றனவா? என்று பலர் சங்கிக்கிறார்கள். ஆதலின் இதைப்பற்றிச் சிறிது விசாரிக்கலாம். பூர்வம் சிவபெருமான் சிரிப்பால் எரிந்துபட்டது என்று சொல்லப்பட்ட திரிபுரம் என்பது மூன்று நகரங்கள். (திரி=மூன்று. புரம்=ஊர்) குறித்த இடத்துக்குச் செல்லக்கூடியவைகள் இரும்பாலமைந்த நகரம் ஒன்று, வெள்ளியாலான ஊர், ஒன்று, தங்கத்தாலிசைத்த நகரம ஒன்று; ஆனவற்றைத்தான் முப்புரமென்பார். குமார, சூரயுத்தத்தில இந்திரஞாலத்தேர் என்பது உபயோகப்பட்டிருக்கிறது. இராமாயணத்தில் சீதையை இராவணன் எடுத்துவைத்து ஆகாயவழிச் சென்றது, குபேரன் புஷ்பவிமானம் அனுப்பவந்து படைகளையும் கூட ஏற்றிச்சென்றது எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இவைகளெல்லாம் யந்திரங்களன்று; தெய்விகத்தன்மையால் உண்டாக்கப்பட்டது என்று ஆக்ஷேபம் வருங்காலத்தில், இல்லை யந்திரமென்று சாதித்தல் சில காரணங்களுக்கு முரணாகும, ஆனால் புமண்டரீக வாசுதேவனென்பவன், தானே நாராயணனென்று, யந்திரமாகிய கருடன்மீது ஏறிக்கொண்டு செல்வதைக் கண்டவர்கள் மயங்கினார்கள். அதனையோர்த்த கண்ணபிரான் அவ்வாகனத்தையும் அவனையும அழித்துவிட்டாரெனக் கூறப்பட்டிருக்கிறது.

ஏமாங்கதநாட்டில் இராசமாபுரத்தேயாண்ட சச்சந்தனென்னுமரசன், தொழிமேவரமேட துலைக் கரைகண்டவனாகிய தச்சனையழைத்து யந்திரமான ஒரு வாகனத்தைச் செய்யென்றான், அவனும சிலை, பற்றுதறகுரியன, வெள்ளியநூல், அரக்கு, மெழுகு முதலியவற்றைக்கூட்டி ஏழுநாளில ஒரு மயில்செய்தான். அந்த யந்திரத்திலுள்ள கருவியை வலமாகச் சுற்றில் ஆகாயத்திற் செல்லும், இடமாக முறுக்கில் பூமியிலிறங்கும் எனச் சீவக சிந்தாமணி நாமகளிலம்பகத்திற் கூறப்பட்டிருக்கிறது இது இயற்றுதற்காகச் சேர்க்கப்பட்ட பொருள்களைக் கவனிக்கத்தக்கது.

"பல்கிழியும் பயினுந் துகிலொடு
நல்லரக்கும் மெழுகும் நலஞ்சான்றன
வல்லனவு மமைத்தாங்கெழு நாளினுட்
செலவதோர் மாமயில் செய்தன னன்றே."

"பண்டவழ் விரலிற்பாவை பொறிவலந்திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம்போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ்வேற்கட்பாவை புரியிடந்திரிப்பத்தோகை
கண்டவா மருள வீழ்ந்து காலகுவித்திருக்குமன்றே.

என்று கூறப்பட்டிருத்தலாலும், இன்னும் சிற்சில சரித்திரங்களில் ஆகாயத்திற் செல்லும் குதிரை முதலிய யந்திரங்களிருந்ததாக ஆங்காங்கு கூறப்பட்டிருப்பது காணப்படுதலாலும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னாளிலேயே பறக்கும் யந்திரம் நம் நாட்டிற் செய்து சமயங்களில் உபயோகப்படுத்திவந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகிறது.

பத்திராசிரியர்.

உ

முத்திநெறி.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்,
மெய்ப்பொருள் காண்பதறிவு." குறள்.

உலகின்கண் நல்லறிவுடையோர்களே சகல செல்வங்களையும் அடைந்து அநுபவித்தற்குரியராவார்கள் என்றும், அவ்வறிவில்லாதவர்களைச் செல்வவான்களாயிருப்பினும் இல்லாதவர்களாகவே மதிக்கப்பெறுவார்கள் எனவும் நீதிநூற்றுணிபாகலால் இம்மையில் மனிதர்கள் அடையப்பெறும் எல்லாவற்றுள்ளும் சிறந்த பொருள் அறிவென்பது பெறப்படுகின்றது—.

எல்லாவற்றுள்ளும் சிறந்தது அறிவேயென்னின் அந்த அறிவைத் தம்மாலியன்றவளவில் ஒவ்வொருவருமடைந்து நாளடைவில் படிப்படியாய் உயர்ந்து உன்னத நிலையாம் முத்தியின்பத்தை

யும் அடையவிரும்புதல் மக்களாகிய நமது கடமையாகும். அங்ஙனங்கொள்ளும் அவாவானது கைகூடும்வகை யாதெனச் சிந்திக்க வேண்டுவதும் அவசியமே யாதலின் அதனைச் சிறிது விசாரிப்போம்.

"இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலா தவர்."

என நமது நாயனார் கூறியுள்ளாராதலின் அறிவு, ஆற்றல், கல்வி, செல்வம் முதலியவற்றில் மேம்பட்டோர்கள், முன் நல்ல தவத்தைச் செய்தோர்கள் எனவும், தவம் செய்யாதவர்களே இம்மையிற் பலவழியினும் ஏழைகளாய்த் துன்புறுபவர்கள் எனவும் நன்கு விளங்குகின்றதாகலின் ஈண்டு தவம் செய்வது இன்றியமையாததெனப் புலப்படுகின்றது.

ஆகலின் மாக்கள் செய்தற்குரிய தவம் எத்தன்மையதெனச் சிறிது உசாவுவோம்.

"தவம் செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லா
ரவம் செய்வா ராசையுட் பட்டு"

என நமது பொய்யாமொழிப்புலவர் துறவறத்திற் கூறியுள்ள விதியைத் துறவிகள் சிறப்புவகையினும், ஏனையோர் பொதுவகையினும் மற்றவற்றைப்போலவே யநுசரித்தல் முறையாதலபற்றி இங்கு துறவிகளல்லாத சாமஷி செய்யுளினின்றும் பெறற்குரிய பொருள் யாதென நோக்குவோம்.

இருதிறத்தார்க்கும் பொதுப்பட நிற்கும் பாகத்தை நீக்கி ஈண்டு அவசியமாய,

"தவம் செய்வார் தங்கருமம் செய்வார்"

என்ற முக்கியாம்சத்தைக் கவனிப்போம்.

(1) தவஞ்செய்வார் = தங்கருமம் செய்வார்,

(1) 7 × 5 = 12

(2) 12 = 7x5

என்பதில் எவ்விதமுமில்லை அதுபோல், (2) "தங்கருமஞ் செய்வார்—தவஞ்செய்வார்" என்பது பொருத்தமாகும். ஆகையால் தங்கருமம் செய்வார். என்பது கிடைக்கப்பெற்றது. ஆயின் இப்போது தங்கருமமாவதுயாது? என்பதை நிதானிக்கவேண்டியிருக்கிறது. (கருமம்—தொழில்) தொழில் என்பது சிறப்பினும் செல்வம் பெறறபொருட்டு யாதாமொருவன் மேற்கொண்டுசெய்யும் வேலையேயாம்.

அததொழிற் பிரிவையூன்றியோசிக்கும் வேலையில் எண்ணிக் கடங்காவாகையால பொதுவகையால் 'செல்வமீட்டல்' என்ற பொதுத்தொழிலைக்குறித்த அம்சங்களை யொருவாறெடுத்துரைக்க மற்றவைகளுக்குரிய அம்சங்களும் சற்றேறக்குறையஇதிலடங்குமென்பது கருதிச்சொல்லத்தொடங்குவோம்.

தற்காலத்திலுள்ள உண்மைச்செல்வவான்கள் முற்பிறப்புகளிலாயினும் இப்பிறப்பிற் கழிந்த ஆயுட்காலங்களிலாவது 'பொருளாட்சி போற்றாதார்க்கில்லை' என்ற நியதியைக்கடைபிடித்துப் பொருள் செயலவழிகளில் ஈடுபட்டுக்கண்ணுங்கருத்துமாய் மனதைப்பொருளீட்டல் வழிச்செலுத்திப் பனி, மழை, வெயில் பசி, களைப்பு முதலிய எத்துன்பத்தையும லக்ஷியப்படுத்தாது, லக்ஷியப்பொருள் ஒன்றிலேயே மனதை நிறுத்தித் தவஞ்செய்யாது செய்கின்றவர்களன்றோ? பிரபு-லக்ஷாதிபதி-கோடீசுவரர் என்ற அரிய நிலைமைகளை யடைகிறார்கள். அரசர், சக்ரவர்த்தி முதலியவர்களும் இதுபோன்ற ஓர் துறையில நின்று நாளடைவில் படிப்படியாயுயர்ந்து உன்னதஸ்தானத்தை யடைந்தவர்களேயாவர். இங்ஙனமடைந்த செல்வப்பெருக்கால் தமது அன்பின்றெடுத்த அருள் என்னும் மகனைக்கொழுக்க வளர்த்து அவ்வருள் முதிர்ச்சியால் உலகின் சிறு இன்பங்களில் வெறுப்புண்டாகித் துறவையடைந்து பேரின்ப முத்திசாதனத்தையும் பெறுகின்றார்கள்.

இது நிற்க, இவ்வுலகிற் பலதொழிற்றுறைகளுள் ஒன்றில் உன்னத நிலையைப்பெற்றவன் எத்தொழிற்றுறையுள்ளவனுனும் அத்துறையின் ஏனையோரைப் பார்க்கினும் மிகவருவாயும் செல்வாக்குமுள்ளவனாயிருப்பதோடு அவர்களால் தொழப்பெற்றவனு

மாகின்றான். உலகிற்சிறப்புற்றோர்க்கும் தொழிற்றுறைகள் பலவற்றில் யாதொன்றிலும் மேம்பாடடையாது மிகத்தாழ்ந்த நிலையிற் றுன்புறுபவர்கள் தவத்தை மறந்தவர்களே யாவர்.

'எல்லாரும் பல்லக்கேறினால் தூக்குதற்கு ஆட்கள் யாவர்?' என்றப்படி ஒருவர் தாம்செய்த தவபலத்தால் பல்லக்கேறின் அவனைப் போகிகளாய்ச் சுமக்கத்தக்கவர்கள் ஒருவரே அல்ல, பலபேர்கள் தேவையாகவிருக்கிறது அதாவது தவத்தை மறந்து பலர் இருந்தாலொழிய தவப்பயனடைவோர் அடையும் பேறு செவ்வனே நடைபெறாது. ஆகவே தத்தமக்குரிய தொழிற்றுறையில் ஒரே மனதாய் நின்று படிப்படியாய் யாதொரு உன்னதநிலையை அடைய முயற்சிப்பதால் குறித்த துறையின் அறிவும், படிப்படியாய் விருத்தியாகி உன்னதபதவி யடைகிறது. பலதுறைகளினின்றும் உன்னத நிலையடைந்தபலரும், பொது அறிவிற்சமத்துவமுடைய ஓர் நிலைமையே யடைகிறார்கள். அதாவது மலையின் ஒருபுறத்து நின்று ஏறத்தொடங்கினும் உன்னதநிலை அதாவது சிகரத்தை யடையும்போது யாவரும் ஒரேஸ்தானத்தையடைதல் போலாம். உலகிலாயவற்றுள்ளும் சிறந்தது அறிவென்னும், அந்த அறிவு தவத்தாலாவது எனவும். அத்தவம் தமக்கு உற்றதொழில் முதிர்ச்சியாலாமென்றும், அத்தொழிலின் உன்னதநிலையை நாளடைவில் அல்லது பலஜன்மங்கள் கடந்தாவது அடையப்பெற்று அதினால் சிற்றின்பப் பேறுகளைப் பலமுறையும் அநுபவிக்க அநுபவிக்க "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்றபடி ஆசாபாசபோக போக்கியங்களில் வெறுப்பும் பரலோகப்பேரின்பத்தில் விருப்பமும் உண்டாகுந்தருணமே துறவியாகுந்தருணமென்பதும் அத்துறவின் அடுத்த நிலையே பேரின்ப முத்திநிலையென்பதும் விளங்குகின்றது. சுபம்.

இங்ஙனம்,

K. குப்புசாமி பிள்ளை.

உ

பஞ்சமர்களுக்கோர் இன்சொல்.

I

சாதுர்வர்ணமென்று சொல்லப்படும் நான்கு பெருங்குல வற்பாடும் இயற்கை யாவற்றுளுண்டாகும் சங்கரகுல வகுப்புகளும் இந்துதேசத்தின்மாத்திரமே காணப்படும். ஏனைநாட்டார் குணபேதமறியார்கள். பிரபஞ்சதத்வபேதங்களையும் அத்தத்வங்களின் தர்மபேதங்களையும், அப்பேதங்கட்கு அநாதி காரணமாகவரும் கர்மமலவுண்மையினையும் உணர்ந்தவர்க்கே இயற்கையிலமைந்துள்ள குலபேதங்களைக் காணவும், அவற்றை வகுக்கவும் இயலுமன்றி ஏனையோர்க்கியலாவாம். இயலாவிடினும் அவர்களும் மானுடரேயாதலால் அவர்களுள்ளுங்குலபேதங்களில்லாமற்போகா. ஆனாலவை அவர்களாலறிந்து ஒழுங்குற வகுக்கப்படாமல் ஓர் நிலையின்றி முறைபிறழ்ந்து நிகழும். தத்வ பரிசோதனையிலும், பரஞான செல்வத்திலும் ஆதிகாலந்தொட்டுப் பேர்போனவர்கள், ஆரியாவர்த்தத்துக்கு அலங்காரபூஷணமாக விளங்கிய மஹரிஷிகள் என்பது சகல மதத்துப் பண்டிதர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாம். குலபேதம் இயற்கையிலமைந்துள்ள தென்பது உலகப் பொருள்களை கவனித்தவிடத்தேயே விளங்கும். எழுவகைப் பிறவிகளுள் மிருக பக்ஷி ஊர்வன-நீர்வாழ்வன-தாவரமாதிகளில் குலபேதம் அதாவது ஜாதிபேதங்கள காணுமபோது மக்கள்-தேவர் ஆகிய பிறவிகளுள் குலபேதமிராதென்று கொள்வது உண்மையுணரமாட்டாதார் கொள்கையாம். இங்கு சிலகாலத்துக்குமுன் நிகழ்ந்த சில சம்பாஷணையை எழுதுவதனால் நமது கருத்து இன்னதென நன்கு விளங்கும்.

ஒருநாள் ரயில் யாத்திரை செய்கையில நாமிருந்த வண்டியில் ஒரு ஜர்மன் மிஷிநெரி வந்தேறினர். மிஷனரியானதால் அவர்கள் தேவன்மனிதனாய்வந்து பிறந்து இறந்த சுவிசேஷத்தை மெல்ல எமக்குப் போதிக்கத்தொடங்கிச் சம்பாஷணையிலிறங்கினர். நம்மை நோக்கி நீர் பிராமணரோ? என்றனர். அல்லவென்றோம். பிறகு இந்துக்களுடையஜாதி ஏற்பாடு எவ்வளவு அவிவேகம்

ஆனது! என்றனர். எப்படியென்றோம். மனிதர்எல்லாரும் கடவுளாற் சமமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்க அவர்களுள் உயர்வு தாழ்வு என்னுஞ் சாதிபேதம் கற்பிப்பது புத்தியோ? என்றனர். மனிதருள் பேதம் யாது மின்றி எல்லோரும் ஒரு தன்மையாய் வாழ்தலில் விருப்பம் பெரிதுடையோ ராதலால், அவர்கருத்தில் காமனு ராயப்பட்டதைத் தெரிவித்துப் பிறகு, சந்தேக நிவர்த்திக் காக ஒன்று கேட்கின்றோம் சாவதானமாகக் கேட்பிரா? என்றோம் அதற்கவரிசைந்த தன்மேல், உலகில பிருகங்களை எடுத்துக் கொண்டு, இவற்றுள் பிரதான பேதங்கள் பல விருப்பதுபோக, ஒவ்வொரு பேதத்திலும் உயர்வு தாழ்வுகளாயுள்ளவுட்பேதங்கள் பல விக்கின்றன. அவற்றை நிரூபிப்ப தற்குக் குதிரையை உதாரணமாகக்காட்டி அக்குதிரைச்சாதியில் அழகிய உந்நதவான் புரவிமுதல், முட்டிக்கால்தட்டும அவலக்ஷண குதிரைவரையில் உயர்வு தாழ்வுகளாயுள்ள உட்சாதிபேதங்களிருக்கின்றனவா? என் றோம், ஆம் என்றனர். கோழி-புறா-கிளி-காடை முதலியவை களைக்காட்டி பட்சி ஜாதி ஒவ்வொன்றிலும் உயர்வு தாழ்வு களா யுள்ள பல உட்ஜாதிபேதங்களிருக்கின்றனவா? என்றோம். ஆம் என்றனர். பாம்பு எறும்பு முதலியவைகளைக் காட்டி, ஊரும் பிராணிகளொவ்வொன்றிலும் உயர்வு தாழ்வுகளாயுள்ள உட்ஜாதி களிருக்கின்றனவா? என்றோம். ஆம் என்றனர். மீன் முதலிய வைகளைக்காட்டி நீர் வாழுஞ் ஜந்துக்களொவ்வொன்றிலும உயர்வு தாழ்வுகளாயுள்ள வுட்ஜாதிபேதங்களிருக்கின்றனவா? என்றோம். ஆம் என்றனர். மர-புல-வாழை-தெங்கு-கல் முதலிய தாவரங் களைக் காட்டி யிவற்றுளொவ்வொன்றிலும் உயர்வு தாழ்வுகளா யுள்ள வுட்ஜாதிகளிருக்கின்றனவா? என்றோம் ஆம் என்றனர். இவ்வனங் கேட்டுக்கொண்டுவருகையில் மிஷினரியவாருக்கு உதவு வுதருக குறிப்லையும், அதை கர்னக்க காவிஞலடிக்கடி திட்டுவ தையுங் கவனித்துவந்தோம். பிறகு எழுவகைப் பிறவிகளுள் ஏனைப்பிறவிகளொவ்வொன்றிலும் பலஜாதி பேதங்களும், அப்பே தங்களொவ்வொன்றிலும், பற்பல வுட்ஜாதிபேதங்களும் இயல்பா யிருக்குமெனில், மனித ஜாதியில்மாத்திரம் உயர்வு தாழ்வுகளா யுள்ள உள்ஜாதி பேதங்களிரா வென்று சொல்வது உலகவியல்பு

உணர்ந்த வுணர்ச்சியாமோ? என்றோம். ஏனையவற்றுட் பேதங்களிருப்பினும், மனிதரெல்லாம் ஒரேதன்மையரே என்று மிஷினரி பின்னு முரைத்தனர் எல்லாம் ஒன்றென்று நீர் சொன்னாற் போதுமோ உதாரணவியல்புஞ் சொல்லவேண்டுவது நியாயமன்றோ என்றோம். மனிதரில் உயர்வு தாழ்வாகிய பேதங்களுளவெனில் அவற்றை விளக்க அவயவபேதங்கள் சிருஷ்டியால் அமைந்திருத்தல் வேண்டும் அங்ஙனமின்றி எல்லோரும் ஒரு அச்சாயிருக்கக் காண்கின்றமையால் மனிதரிற் பேதங்கூடாது என்றனர். அழகிய வான்புரவிக்கும், முட்டிக்கால் தட்டுங்குதிரைக்கும் அவயவபேதங்கண்டீரோ? அதிமதுரமாயுள்ள வுயர்ந்த கட்டு மாங்கனி மரத்துக்கும், நாயிவரையில் ஈறுவலிக்கும வெம்பிய கனிதரும் மாமரத்துக்கும அவயவபேதங்கண்டீரோ? அங்ஙனமே பலாமுதலிய வற்றிற்கும அவயவபேதங்கண்டீரா? என்றோம். வெள்ளைக்காரரானதால பொறுமை பொழிந்து கோபத்தொனியுடன் மனிதரெல்லாம் ஒன்றுதான் "என்று தமது மிஷினரியியல்புக்கிணங்கப் பின்னும் பிடிவாதமாகச்சொன்னர். அதுகேட்டுச்சிரித்தோம். இதற்குள் அவரிறங்கும் ஸ்டேஷன்வர அவரிறங்கிச்சென்றார்.

இச்சம்பாஷணையைக்கூர்ந்து உணர்பவருக்கு, உலகில் எழுவகைப்பிறவிகளும உயர்வு தாழ்வான பல வுட்ஜாதிபேதங்களியல்பாயமைந்திருக்கு முண்மை யினிதுவிளங்கும. அதுமட்டோ பிரபஞ்சமே பேதவியல்போடமைந்திருக்கு மியல்பும் விளங்குமென்க. இனி சிருஷ்டியால் கீழ்மேல் முதலிய பேதவியல்புகளென் அமையவேண்டும்? என்று சிலர் வினவலாம் இதுபற்றி மறுமுறை எழுதப்படும்.

தினகரன்.

பெண்கல்வியைப்பற்றி,

(சேலம் ஜில்லா கலெக்டர்)

Mr. E. W. Legh. I. C. S. (லீதுரையின்)

பேச்சு.

நம் தமிழ் நாட்டில் சிற்சில, ஏதேனும் பொதுக்கூட்டங்கள் நடந்தால் அப்பொழுது அந்தசபைக்கு அநேகமாகப் பட்டதாரிகளான பி. ஏ. பி எ; பி எல், களும் வந்திருப்பார்கள். அவ்வளவு இல்லாவிட்டாலும் கொஞ்சம் இங்கிலீஷ் படித்தவர்களாவது வந்திருப்பார்கள். அவர்களைச் சபாநாயகராக ஏற்படுத்துகிறது, பெரும்பான்மையாக நடக்கிறது. அந்தச்சபையில இன்னார் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன் என்பவரும், அதைநானும் ஒப்புகிறேன் என்பவரும் இங்கிலீஷில் சொல்வதுண்டு பின்னிட்டு சபைத்தலைமை பூண்டவரும் இங்கிலீஷில் பேசுவார். அப்படிக்கூடியுள்ள சபையில் 10 பேர் இருந்தால் 3 பேர் இங்கிலீஷ் தெரிந்தவர் இருப்பார். ஏனையோர்களெல்லாம் ஆங்கிலமறியாத சுதேசிகளே. கூடியசபையோ அந்நாட்டினர் தெரிந்து முடிவு சொல்லவேண்டிய விஷயங்களே. யூனியன் பஞ்சாயத்து, தாலூக்கா போர்டு, இளைஞர் கற்கும் பாடசாலை முதலிய இடங்களிலும் கூட, இங்கிலீஷ் சில வார்த்தைகள் மாத்திரம் தெரிந்து கொண்டவர்களும் இங்லீஷில் பேச ஆரம்பிப்பதுமுண்டு. இதனால் நாட்டு ஜனங்களுக்கும் சிறுவர்களுக்கும் எடுத்த சங்கதியும், முடிந்த சங்கதியும் தெரியாமல் எழுந்துவந்து விடுகிறார்கள், இதனால் நாட்டு விஷயங்களிலோ, ராஜாங்கவிஷயங்களிலோ பொதுஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்களில் சுதேச பாஷையிலேயே பேசினால் ஜனங்களுடைய மனதில் அவ்வார்த்தைகள் பதிந்து பலனைவிளைவிக்கும். அவ்வாறு இல்லாமல் நம்நாட்டுப்பட்டதாரிகளே, நம்பாஷையை இழிவுபடுத்திப், பொதுஜனங்களுக்கு பொதுக்காரியங்களில ஞானவொளிவிளங்காமற் செய்கிறவர்களாகிறார்கள். ஆங்கிலங் கற்ற பெரியமனிதர்களும், உத்தியோகஸ்தரும் தேசபாஷையில் பேச ஆரம்பிப்பார்களானால் மற்றவர்களும் பேசுவார்கள். இவ்வித நினைவு நினைப்பதற்குத் தேசா

பிமானியாகிய கனம்காந்தி தமநாட்டில் விதைபோட்டார். ஈரோட்டில் நடந்த ஜில்லா கான்பிரன்ஸின் தலைமையை வகித்த தமிழ் ஆகிய தேசபாஷை தமக்குத் தெரியாதாகையால் தாம் ஒப்பப்பின்னடைந்த அனிபெஸண்டு அம்மையார் நீர் தெளித்தார் அதற்கு முளைதோன்றும்படி செய்தவர், சேலம் ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் வீ துரையவர்கள் என்று சொல்லத் துணியலாம். திருச்செங்கோடு சிறுமியர்பாடசாலையில் 15-7-15 ல பரிசளிப்புக்கொண்டாட்டம் நடந்தது. அன்று மிஸ்டர் வீ துரையவர்கள் தம் சீமாட்டியுடன் விஜயம் செய்து ஆக்கிராசனத்தை ஏற்றுக்கொண்டார். அப்போது அவர் தமிழ் பாஷையில் பேசினபேச்சின சுருக்கம் இது:—

"கனவான்களே!

இன்று இவ்விடத்தில் இந்தக் கூட்டம் கூடியது ஆச்சரியத்தை விளைவிக்காது. நம் முன்னோர்கள் இவ்வித கூட்டம் கூடியிருப்பார்களல்லவா? இப்போது இந்த தேசத்தில் பெண்களுக்குப் படிப்பு வேண்டுமென்று பெற்றோர்கள் மெத்த ஆசைப்படுகிறார்கள். ஏன்? இந்நாட்டில் சிறுவர்களிலும கூட புருஷர்களுக்குப் படிப்பு அதிகப்பட்டுவருவதால் ஒவ்வொரு படித்த புருஷனும் படித்த பெண்ணை விவாகம செய்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறதினால்தான். முன்னாளில் சிறுமிகளைப் பள்ளிக்கூடத்தில் விட்டுப்படிப்பிக்கவேண்டுமென்ற ஆசை இருந்திருக்கவில்லை. ஆனால் பெண்கள் மூன்று காரியங்களில் பழகியிருந்தால் போதுமென்று நினைத்தார்கள். 1 வீட்டுக் காரியங்களைப் பார்த்துக்கொள்ளவும், 2. சமையல் செய்யவும், 3. குழந்தைகளுக்கு நோய்கள் வாராமலும, சிறு நோய்கள் கண்டால் அவற்றை நீக்கிக்கொண்டு நன்றாக வளர்ப்பிக்கவும ஆகிய காரியங்களே. பெண்களுக்குப் படிப்பு வேண்டியதில்லை; படித்தால் புருஷனை மதிக்கமாட்டார்கள் என்று சிலர் நினைப்பது உண்டு. அந்த எண்ணம் சரியன்று எப்படியெனறால், நன்றாகப் படிப்பறியாத ஒரு தந்தையர் தன் பிள்ளைகளை பி. எ. முதலிய பட்டாதாரியாகும்படி படிப்பித்தால், தன்னை மதிக்கமாட்டார்களென்று படிக்கவைக்காமல்

விட்டு விடுகிறார்களோ? அப்படிப் படித்துக்கொண்ட பிள்ளைகள், படிப்பில்லாத தகப்பனை மதிக்காமல் விட்டுவிடுகிறார்களோ? இல்லை! இல்லை!!. ஆனால் படித்த ஒருவரிடம் இவ்வித கெட்ட செய்கை யிருக்கப்பட்டதாகக் கண்டது உண்டு என்றால் அவ்வித கெட்ட செய்கை படிப்பினால் வந்ததல்ல. குணத்தினால் வந்தது. அது எப்படியென்றால்:—அரிவாள் என்ற கூர்மையுள்ள ஆயுதம் ஒன்று இருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அந்த அரிவாளானது, நல்ல குணம் உடையவனிடத்தில் இருந்தால், முட்களை வெட்டவும், விறகு நறுக்கவும், தேங்காய் முதலியன சீறவும் உபயோகமாகும். கெட்ட குணம் உடையவனிடத்தில் இருந்தால், அக்கொடியவனுக்குக் கோபம் வருவது சகஜமானதால், எதிர் நின்ற ஒருவனை வெட்டுதற்கு அந்த அரிவாள் உபயோகமாகும். அரிவாள் ஆகிய ஆயுதம் நல்லவனுக்கு நல்ல காரியத்துக்கும், கெட்டவனுக்குக் கெட்ட காரியத்துக்கும் உபயோகப்பட்டதை யோசிக்கிற பொழுது, படிப்பானது நல்லவனிடத்து நல்வினை செய்யவும், தீயவனிடத்தது தீவினையையும் நடத்த உபயோகமாகிறது. ஆனதால் படிப்பினால் கெடுதல் வாராது படிப்பு வேறு நடக்கை வேறு; ஆதலின் நல்லொழுக்கத்தைப் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே பழக்கவேண்டும் அது பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களாலேயே முற்றிலும் கற்பிக்கப்படுவதன்று ஏனென்றால் பாடசாலையில் பழகுவது சொற்பநேரமே. எல்லா நேரமும் தாய் தந்தையர்களிடத்தில் பழகியிருப்பதால் பெற்றோர்கள் குழந்தைகளை நல்வழியில் நடக்கக் கற்பிக்கவேண்டியது அப்படி பழக்குவதற்குத் தாயாருக்கு நல்லொழுக்கமான படிப்பு மெத்த அவசியம்!.

என்று தமிழ்ப்பாஷையிலேயே பேசினார். இந்தப்பேச்சானது அங்கு கூடியிருந்த ஆண், பெண், சிறுவர் முதலிய எல்லோர் மனதிலும் பதிந்தது. ஐரோப்பாதேசத்து ஜனித்து அவ்விடமே வாசித்து இத்தமிழ்நாட்டிற்கு உத்தியோக முறையாகவந்து சொற்பநாள் அநுபவந்தானுள்ள இந்த அந்நிய நாட்டினர், நம்மவர்கள் முன்னிலையில் தமிழில்பேசியதின் கருத்து, கூடியிருப்போர் தமிழரானதால் தாம் சொல்வது அவர்கள் மனதில் பதியவேண்டுமென்பதன்றோ? நம் நாட்டில் ஒரு தமிழ்ப்பெண் வயிற்றிற்பிறந்து

வளர்ந்து, நாளும் தமிழ்பேசி வருகிறவர்கள், ஒரு கூட்டத்தில் தமிழ்ப்பேசத்தெரியாது என்பதைவிட என்ன தாழ்வு வேண்டும். இவர்களைவிடத் தமிழ்ப்பாஷைக்குச் சத்துரு வேறுவேண்டுமோ? தம் பாஷையினிடத்திலேயே இவ்வளவு வெறுப்பு வைப்பவர்கள், தம் நாட்டின் பேரிலும் தம் நாட்டினரிடத்திலும் எவ்வளவு அவமதிப்புக் கொண்டிருப்பார்கள். இவர்களைப்போல வேறுதேசத்தார்கள் தங்கள் பாஷையை புறக்கணித்திருக்கிறார்களா? அந்நிய பாஷைகளிலுள்ள அரிய நூல்களைத் தங்கள் தங்கள் பாஷையில் மொழிப்பெயர்த்துத் தம்மவர்களை ஞான ஒளிவிளங்க அன்றோ செய்து வருகிறார்கள். தேசாபிமானம் முதலான ஞானங்களைப் வாசித்தறியும்படி இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலுள்ள சிறியபெரிய நூல்களை மொழிபெயர்த்து, பத்திரிகை மூலமாக வெளிப்படுத்தி, அவற்றைப்புத்தகமாக்கி வாசிக்கச்செய்தால் எவ்வளவு சீக்கிரத்தில் பெண்களின் அறிவு விசாலப்படும். அவர்கள் அறிவில் முதிர்ச்சிபெற்றால், இளமையிலேயே குழந்தைகள் தேசாபிமான ஞானத்துடன் வளர்ந்தோங்கு மன்றோ? பெரும்பொருள் செலவிட்டுத்தேசோபகாரம் செய்யாவிடினும், மாதத்தில் ஒரு பைசாக் காகிதச்செலவும், சொற்பவிநாடிச்செலவுமிட்டு நலவிஷயங்கள் எழுதி விடுத்துப் பரப்பினால் எத்தனையோ பெருமான்மைகளை விளைவிக்குமே.

பத்திராசிரியர்.

உ

நம்நாட்டின்

பெரிய குடித்தனங்களிற் பல, க்ஷீணமடையக் காரணமென்ன?

I.

நமது நாட்டிற் பிரபலமாக வர்த்த குடும்பங்களிற் பல நசித்துப் போதற்குக் காரணமென்ன? என்பதைப்பற்றிச் சற்று ஆலோசித்து பார்ப்பது அவசியமாகக் காணுதலின் கவனிப்போம்.

இளமையிலேயே சிறுவர்களைச் சீர்படுத்தாத காரணமென்றே சுருக்கமாகச் சொல்லலாம். அருமையாகப் பிறந்தபிள்ளையென்று

அக்குழந்தையின் இஷ்டப்படி ஆடப்பாட இஷ்டமானவர்களுடன் கூட விட்டுவிடுகிறார்கள். அக்குழந்தை தான்சேர்ந்த இனத்தாரின் சாப்பாகப் பல கெட்டமார்க்கங்களில் தலையிட்டுக் கெட்டுப்போகின்றது. குழந்தைகளை வெகுஜாக்கிரதையாக வளர்க்க வேண்டுவது பெரியோர்களின் கடமை. விக்டோரியா மஹாராணியாரின் சரித்திரங்களை நன்றாகக்கவனித்தவர்களுக்குக்குழந்தைகளை வளர்த்தும் முறை நன்றாய்த்தெரியும். ஆகாரம் முதலிய சிலவற்றில் மாத்திரம் தங்களுக்குள்ள செலவாக்கை உபயோகிக்க வேண்டும். கல்வி பயிலல், தொழில் கற்பித்தல், தேகப்பயிற்சி முதலியவைகளில் சாமானிய பிள்ளைகளைப்போலவே உபாத்திமார்களுக்கு அடங்கி நடக்கும்படி செய்யவேண்டும். படிப்பு முதலியவற்றில் போட்டி போட்டுக் கற்கும்படி மற்றைப்பிள்ளைகளுடன் கூட்டி அக்கரையை விசாரிக்கவேண்டும். ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், ஜாகீர்தார்கள் முதலான கனவான்களின் குமாரர்களுக்கு இறுமாப்பு அதிகம் இருக்கும். ஏனென்றால் தங்களில் தான் பெரிய அந்தஸ்துள்ளவன் என்றும், ஏனையோர் தாழ்ந்தவர்கள்என்றும் கொள்ளும் எண்ணமே. அவ்வித எண்ணங்கொள்ளாதபடி இக்குமாரனைவிட வாசித்தல், தொழில் செய்தல், தேகப்பயிற்சி முதலியவைகளிற்சிறந்தபிள்ளைகளைச் சுட்டிக்காட்டி இவனுடைய தாழ்வை அறிவிக்கவேண்டும் "கர்வம் வந்தகாலத்தில் தன்னிலுயர்ந்தோரையும், சோர்வு நேர்ந்தபொழுது தன்னிற் றாழ்ந்தோரையும் பார்க்கவேண்டும்" என்பது நீதியல்லவா? சிறு நகரங்களில் வசிப்பவர்களுக்கே அகங்காரம் அதிகம் உண்டாவது இயல்பு "கூவலாமை குரைகடலாமையைக்-கூவலொடொக்குமோ கடலென்னல்போல" என்றதிருவாக்கின்படி "ஒரு சிறு கிணற்றிலுள்ள ஆமை, கடலிலிருந்துவந்த ஆமையைப்பார்த்து ஏ நண்பனே! சமுத்திரமென்பது இந்தக்கிணற்றளவு இருக்குமா? என்று கேட்டதுபோல சிறுநகரங்களில் இருப்பவர்கள் பேரூரும், அவ்வூரில் உள்ள கனவான்களின் நிலைமை முதலியவற்றையுமறியாதவர்களானதால தனக்குச் சமானம் ஒருவருமிருக்கமாட்டார்கள் என்று நினைப்பதுண்டு. இவ்விதமான குக்கிராமவாசிகளை பெரிய பட்டணங்களுக்கும், பெரிய கனவான்களிடத்திற்கும், அழைத்துபோய், அவர்கள் வீடு, தொழிற்

சாலை, ஆகாரம், யோக்கியம் மற்றும் பலவற்றையும் கவனிக்கும்படி செய்விக்கவேண்டும். அப்படிப்பார்ப்பதில் சர்வம் தானாகவே சுழன்றுவிடும். ஐயோ நம்மவீட்டைப் பெரிதென்றுநினைந்தோமே! ஆகாரத்தைப் பெரிதென்றோமே! இங்கேஇவர்களைப பார்க்கிற பொழுது நமது வீடும, செல்வமும, தொழிலும, ஆகாரமும் எவ்வளவு கேவலமாக இருக்கிறது? என்ற எண்ணம் வரும். இவ்வளவு உயர்நதவர்களாக இருந்தும், நம்மிடத்து எவ்வளவு மரியாதை காட்டினார்கள். நாமும அவ்வாறு மரியாதையாக நடக்கவேண்டும் என்ற எண்ணம் ஜனிக்கும்.

அவர்கள் பூமியைப் பண்படுத்தும் முறையும், கால்நடைகளை விருத்திசெய்யும் மார்க்கமும், பொருளை வளர்க்கும் துறையும், காரியஸ்தர்களை அன்புடன் ஏவி தொழில் செய்வித்து அனுகூலங்களை அடையும் துறைகளும் நனகு பதியும, இதுபோலக்குமாரர்கள் மனது தொழில் விருத்தியிலும், பொருள்தேடும் நல்வழிகளிலும பதியும்படி மனதைப்பண்படுத்தவேண்டும். இளமையில் மனது திருந்து மாயின் அறிவு விசாலமாய்த் தன்தொழிலை நல்லாலோசனையுடன் நடத்த இடமாகிறது. அப்பால் அடிக்கடி வெளியே போய் அவ்வக்காலத்துக்கேற்ற முறைகளைக்கையாட வேண்டிவரும். இப்படியில்லாதவர்களே மனமபோனபடி நடந்து துன்மார்க்கர்களுடன்கூடி குடி, விபசாரம், துர்வழக்கு, பொய் இன்னும்பலதீயகாரியங்களில்தலையிட்டுத், தனக்குத்தெரியாது, தன்னைச் சேர்ந்தோர் செய்யும் பொல்லாங்குகளிற் கலவாதிருந்தும் தான் உடன்பட்டு, பொருளிழந்து, அபகீர்த்திபெற்று, பழிபாவத்துக்கும் ஆளாகவேண்டி நேரிடுகிறது. ஆண்மக்களை மாத்திரமன்று பெண்மக்களையும, பெற்றோர், சகோதரா அல்லது கணவன்முதலியோர், நல்ல சிநேகிதா பந்து வர்க்கங்கள் வீட்டுகளுக்குப்போம்போது அழைத்துக்கொண்டுபோய், பெரியோாகளிடத்து நடந்துக்கொள்ளும் முறை, மாமன், மாமி, கணவனுடன் பிறந்தார், அவர்களின் பாட்டிமார், அவர்களின் குழந்தைகள், சிநேகிதவர்க்கங்கள் சுற்றத்தார் முதலியவர்களிடத்து அவர்கள் நடந்துகொள்ளும் மாதிரி, சமையற்பாகம், அனைவற்றையும்பரிமாறச்செய்தல், பரிமா

தல், உணவருந்துவித்தல், உபசரித்தல், வரவேற்றல் வழியனுப்பல் முதலியவற்றையும், சிக்கனமாகக் குடித்தனம் நடத்தல், ஊழியக்காரர்களை நடத்தல் முதலியபல விஷயங்களையும் நன்றாகக்கவனித்து அவைகளைப் புதிய வகைகளில் தமக்கு ஏற்றவற்றைக் கிரகித்துக்கொள்ளும்படி செய்யவேண்டும். இதனால் தங்களுக்குள்ள எல்லாச்செருக்குகளும் போய் மரியாதை யுடையவர்களாயும், நன்கு மனைவாழ்க்கையை நடத்துந்தரமுள்ள வர்களாயும் கணவன் கருத்தறிந்து நடக்கக்கூடிய விவேக முள்ளவர்களாயு மிருப்பார்கள். அவ்வாறில்லாது ஆண்மக்கள்மாத்திரம் நாகரீகபுருஷர்களுடன் பழகியிருந்து வீட்டிற்பெண்கள் அஃதறியாமலிருந்தால் தங் கருத்துக்கு ஒவ்வவில்லையென்று வெறுத்து, எல்லாவகையிலும் மாறுபாடாக நடக்கும்படியாகிறார்கள். இதனால் ஆண் பெண் களிரு தாத்பரியத்தும் தீயவர்கள்கூடி "எறும்பூரக்கற்குழையும்" என்றபடி வேறுபாடுசெய்யக்கூடு மன்றோ?

இதுவுமன்றி தானே எஜமானனென்றும் தன்னெதிரில் பிறர் உட்காரல், உண்ணல், வாசித்தல், உலாவல் மற்றை நலங்களை யனுபவித்தலில் அசூயைகொண்டு கெட்டுப்போகிறார்கள். ஏழைகளை வருத்துதலுமாய் அவர்களிடத்துத் தண்டம் பிடித்தலும் செய்து வீண்வழக்குகளிலும் பல தீங்குகளிலும் தலையிட்டுப்பொருள் நஷ்டம் பிறர் அவமதிப்பு முதலியவற்றிற்குப் பலவிதத்திலும் நஷ்டம்கொண்டு க்ஷீணகதிக்கு வருகிறார்கள்.

கந்தசாமி பிள்ளை B. A.

சைவம்.

உலகமெலாந் தொழுதேத்தும் முழுமுதற் கடவுளனுக்கிரகத்தினால் தோன்றியுள்ளவற்றுள், புல்மரமாதியன பரிசமொன்றையே அறியும் ஓரறிவுயிர்கள், பரிசம், இரசம் இரண்டையுமறியும் சங்கு நத்தை முதலியன ஈரறிவுயிர்கள் பரிசம் ரசம் கந்தம் மூன்றையுமறியும் எறும்பு கறையான் முதலிய மூவறிவுயிர்கள். பரிசம் ரசம் கந்தம் உருவம் நான்கையுமறியும் வண்டு தும்பி முத

வியன நான்கறிவுயிர்கள். பரிசம் ரசம் கந்தம் உருவம் சத்தம் ஐந்தையுமறியும் பசு புள் இவை ஐயறிவுயிர்கள். மாந்தர்களோ நன்மை தீமையென அறிந்து எவ்வும் எஞ்ஞான்றும் சுகம்பெறவல்ல பகுத்தறிவுள்ளவர்கள். விலங்கு பறவை முதலியன சிருட்டி காலத் தொடக்கத்தில் உறைபிடம் உணவு எவ்விதம் கொள்ளப்பட்டனவோ அவ்வண்ணமே இன்றும் நாளையும் இயல்பிற் கொள்கின்றனவன்றி மாற்றி ஏற்றனவன்று. மனிதர்களோ, சரீரம் ஆடை உறையுள் உணவு முதலியவற்றை காலக்கிரமத்தில் எத்தனையோ விதங்களாக மாற்றி மாற்றி இன்பம் பயப்பதெதுவோ அதனைக் கைக்கொள்கிறார்கள்! இம்மட்டோ, சாஸ்திர ஆராய்ச்சியால் பூமியின் களம், வானத்தின் விரிவு, சூரியன் சந்திரன், மற்றைக்கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றின் கதி கிரணமாதிகளும், மற்றையண்டத்தியற்கை செய்கைகளும் கண்டறிகிறார்கள். கப்பல் புகைவண்டி, தந்தி, கம்பியில்லாத்தந்தி ஆகாயரதம் முதலியன இயக்குதலும் செய்கிறார்கள். இவைகளும் பிறவும் இவ்வுலகத்தில கீர்த்தியையும் தேக சுகத்தையும் பெறுதற்பொருட்டேயாம். இவ்வுடல் ஆன்மா உறைதற்கான ஒரு வீடு, கூடு, முட்டை இவைகள் போன்றது. ஆன்மா இக்கூட்டை விட்டுப்பிரிந்துபோம்.

> "குடம்பை தனிற்பிறந்த புட்பறந் தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு" என்றார்

தெய்வத்திருவாக்கினரும். முட்டையினின்று வெளிப்போந்த பறவை மறுபடி அதனுட்டங்கிச் சுகித்தலில்லாவாறுபோல, தேகத்தினின்றும் பிரிந்த ஆன்மா மறுபடி அக்கூட்டில் வசித்தல் கொள்வதில்லை. உடலுக்கும் உயிருக்கும் இடையில் சேர்ந்த சிநேகம் இவ்வளவுதான். ஒருவன் பழைய உடைகளை நீக்கிப் புதிய சட்டைகள் தரித்துக்கொள்வதுபோல இவ்வான்மா பல் உடல்களையெடுத்து விட்டிருக்கின்றது. இன்னும் எடுக்க விருக்கின்றது.

தேகத்தைவிட்டு உயிர் நீங்குதற்குக்கால நியதிதெரிவதில்லை. இத்தேகம் ஒவ்வொரு கணப்பொழுதிலும் அழியும் என நினைக்க வேண்டியதகுதி வாய்ந்தது. ஆன்மாவோ அப்படியல்ல என்று

முள்ளது. அழிவிலாதது. சுகதுக்கங்களை அனுபவிப்பது ஆன்மாவோ? தேகமோ? என்று யோசித்தால், உயிர்போனபின் உடல் ஒன்றும் அறிவதில்லை யாதலால் ஆன்மாதான் சுகதுக்க மனுபவிப்பது என்று எளிதில் நினைக்கலாம்.

பின்னல், வானவில் போன்று தோன்றியழியும் தேகத்தைக் காட்டிலும், அழியாதுள்ள ஆன்மாவே விசேஷமானது. ஆன்மா இரத்நம் போன்றது. உடல் சிமிழைப்போன்றது. இரத்நத்தை மதியாமலெறிந்துவிட்டு, அதைவைத்துள்ள சிமிழைமாத்திரம் காப்பாற்றுவாருண்டோ? பல்லக்கிலூர்ந்துள்ள அரசனைக்கீழே தள்ளி உதைத்துவிட்டு, மன்னன் வறிய பல்லக்கைப்பாதுகாப்பாருண்டோ; அதுபோல இரத்நமாகிய ஜீவனை, உடலாகிய சிமிழிலும், அரசனாகிய ஆன்மாவைப் பல்லக்காகிய தேகத்திலும் கடவுள் வைத்துக் கொடுத்திருக்கின்றார். இரத்நத்தையும் அரசனையும் போன்ற ஆன்மாவை அவமதித்துவிட்டுச் சிமிழை, சிவிகையைப் போன்ற தேகத்தை மிகவும் மேன்மையாகப் போஷிக்கின்றோம். நாம் உடுக்கும் கௌபீனத்தைப்போலவேனும், வளர்க்கும்நாயைப் போலவேனும், ஆன்மாவைக்கவனிக்கின்றோமில்லையே, கௌபீனம் அழுக்காகுமாயின்ஜலத்தில்தோய்த்து சுத்திகரிக்கின்றோம்; நாய்க்கு எவ்வளவு அக்கரையோடு உணவு கொடுத்தும் போஷிக்கின்றோம். துர்ப்பலப்பட்டால் மண்பிசைந்து அப்புகின்ற சுவர்போலவேனும் கருதுகின்றோமில்லையே நாம ஆன்மாவைப்பற்றிய வேறுவேறான தீவினையாகிய அழுக்குகளைச் சுத்திகரிக்கின்றோமில்லையே. ஆன்ம சுகதுக்கு ஏதுவான நல்லொழுக்க உணவைத்தேடி யளிப்பதுமில்லையே! என எண்ணமுற்றொருவன் ஆராய்ந்து வினவித்தெளிவானுபின், இவ்வண்டங்களில் செயற்கைபொருள்களை ஆச்சரியமுறும்படி பற்பல விதமாக மனிதர்களாற் சிருட்டிக்கக் காண்கின்றோம். இயற்கைப்பொருள் ஒன்றையேனும் சிருஷ்டித்ததாகக் கேள்விப்படவில்லை. ஈக்கள்; தேனை ஆக்குவிக்கும் வலியுளது. ஆனால் தேனுக்கு மூல இயற்கைப்பொருளான பூக்கள்முதலியவற்றுண்டாம் மதுவர்க்கமாதியவற்றைச் செய்துகொள்ளும் இயல்பு பொருந்தாதன்றோ? இதுபோலவே பிறவுமாம்: ஆதலின் எல்லா